# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.46B] CHENNAI WEDNESDAY, NOVEMBER 26,2008**

**Karhigai 11, Thiruvalluvar Aandu-2039**


## Part VI --- Section 2

***Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.***

---

***NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.***

---

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/ 7–7, 2007, 14. 12. 2007 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்படுவதாலும் மற்றும் அது 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை செய்யப்படுவதாலும்,

மற்றும் உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த தெருவிளக்குகள், குடிநீர் வழங்கலுக்கான பணிகள் மற்றும் பிற அனைத்துப் பணிகள் தொடர்பாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பினைத் திருத்தங்கள் செய்வது அவசியமென கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தங்கள், முந்திய வெளியிட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருப்பதாலும் மற்றும் அதற்கிணங்க அந்த முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 50ஆம் பிரிவுடன்

சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவினாலும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் பிற வகைமுறைகள் அனைத்தினாலும் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம் (இதன் பின்பு முதன்மை விதித் தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைக்கிறது, அதாவது :—

1. <u>குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்</u> :

(a) இந்த விதித் தொகுப்பு " 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வழங்கல் (இரண்டாம் திருத்தம் ) விதித் தொகுப்பு, என்று வழங்கப்பெறும்.

(b) இந்த விதித் தொகுப்பு, 2007 மார்ச் 13 அன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படும்.

2. <u>முதன்மை விதித் தொகுப்பின் 5 ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல்</u> :

முதன்மை விதித் தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறை விதியின் (4)ஆம் உள்—ஒழுங்குமுறைவிதியில், —

(a) (ii) ஆம் கூறுக்கு பதிலாகப் பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும் :-

(ii) (a) HT நுகர்வோர் எவரும், உரிய தேதியில் பட்டியல் எதனையும் செலுத்துவதற்குப் புறக்கணிக்கிறவிடத்து, அவர் செலுத்துகைக்கான உரிய தேதிக்குப் பின்வரும் நாளிலிருந்து காலங்கடந்து செலுத்துகைக்கான உபரிக்கட்டணம் செலுத்துவதற்கு உள்ளாதல் வேண்டும். (உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த பொது விளக்கு மற்றும் குடிநீர் வழங்கல் தொடர்பான பணிகள் மற்றும் பிற பணிகள் தவிர) LT நுகர்வோர் எவரும் அறிவிப்புக்கால அளவின் கடைசி நாளில் பட்டியல் எதனையும் செலுத்துவதற்கு புறக்கணிக்கிறவிடத்து, அவர், அறிவிப்புக்கால அளவின் கடைசி நாளுக்கு அடுத்து வரும் நாளிலிருந்து காலங்கடந்த செலுத்துகைக்கான உபரிக்கட்டணம்

செலுத்துவதற்கு உள்ளாதல் வேண்டும்.

(b) உள்ளாட்சி அமைப்புகள் பொது விளக்குகள் மற்றும் பொது குடிநீர்ப்பணிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிற பணிகளுக்கான LT மின்னிணைப்புகள் பொறுத்து பட்டியல்கள் எவற்றையும் செலுத்த புறக்கணிக்கிறவிடத்து தவறுகிறவிடத்து, காலங்கடந்த செலுத்துகைக்கான உபரிக்கட்டணம், கோரிக்கைத் தேதியிலிருந்து 60 நாட்களுக்கு அப்பால் செய்யப்படும் செலுத்துகைகளுக்குப் பொருந்தத்தக்கதாகும். கோரிக்கைத் தேதியிலிருந்து 60 நாட்களுக்கு அப்பால் செய்யப்பட்ட செலுத்துகையைப் பொறுத்தவரை, காலங்கடந்த செலுத்துகைக்கான உபரிக் கட்டணம், கோரிக்கைத் தேதியான 60 ஆம் நாளுக்கு அடுத்துவரும் நாளிலிருந்து செலுத்தத்தக்கதாகும்.

(c) உபரிக்கட்டணத்தின், குறைந்தபட்சக்கால அளவானது பதினைந்து நாட்கள் ஆகும் மற்றும் காலத்தாழ்வு பதினைந்து நாட்களுக்கு மேற்பட்டு, ஆனால், ஒரு மாதத்திற்கு மேற்படாதிருக்கிறவிடத்து, அது, முழு மாதங்களின் எண்ணிக்கை ஆகும் மற்றும் ஒரு மாதத்தின் பின்னம் எதுவும், நாட்களின் எண்ணிக்கைக்குச் சரிசமவீத அளவானதாகும்.

(b) (iv) ஆம் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :-

(iv) (உள்ளாட்சி அமைப்புகள் தவிர) LT நுகர்வோரைப் பொறுத்தவரை, உபரிக்கட்டணம், மின்சாரம் வழங்கலுக்காகக் கொடுபட வேண்டியதாக இருக்கிற நிலுவைத்தொகைக்காக மாதம் ஒன்றுக்கு 1.5 விழுக்காடாக ஆக இருத்தல் வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த LT மின்னிணைப்புகளைப் பொறுத்தவரை, உபரிக்கட்டணம் மின்சாரம் வழங்கலுக்காக கொடுபடவேண்டியதாக இருக்கிற நிலுவைக்காக மாதம் ஒன்றுக்கு 0.5 விழுக்காடாக இருத்தல் வேண்டும்.

**[தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி]**

இரா. பாலசுப்பிரமணியன்
**செயலாளர்**